மாதம் இரு முறை வெளிவரும் இலவச இதழ், 10 டிசம் - 23 டிசம் 2006, குரல் 05

Voice of London Tamils

லண்டன் குரல்


நன்றி: நிதர்சனம் (படம்)



# மகிந்தவுக்கு வழங்கிய காலக்கெடு முடிந்துவிட்டது.

# தமிழீழமே தீர்வு!

## புலம்பெயர்ந்த மக்கள் தங்கள் ஆதரவை வாரி வழங்க வேண்டும்.

### மாவீரர் தின உரையில் விடுதலைப்புலிகளின் தலைவர் வே பிரபாகரன்

"கடந்த ஆண்டு எனது மாவீரர் நாளுரையில் ஒரு நீதியான தீர்வை முன்வைக்குமாறு இறுதியாகவும் உறுதியாகவும் மகிந்தவை நான் கோரியிருந்தேன். அந்த அவசர வேண்டுகோளை நிராகரித்து தமிழர் தேசத்திற்கு எதிராக போர் பிரகடனத்தை செய்திருக்கிறார்" என்று நவம்பர் 27 மாவீரர் தினவுரையில் குறிப்பிட்ட விடுதலைப் புலிகளின் தலைவர் வே பிரபாகரன் "தமிழீழத் தனியரசை நிறுவுவதென இன்றைய நாளில் நாம் தீர்க்கமாக முடிவு செய்திருக்கிறோம் எனத் தெரிவித்தார்." மேலும் புலம்பெயர்ந்த உறவுகளின் பங்களிப்பிற்கும் உதவிகளுக்கும் நன்றி தெரிவித்த அவர் தொடர்ந்தும் தங்கள் தார்மீகக் கடமையை ஆற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

மாவீரர் தின உரையை உறுதிப்படுத்தும் வகையில் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு ஆலோசகரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்சவை குறிவைத்து தற்கொலைக் குண்டுத் தாக்குதல் டிசம்பர் 1இல் இடம்பெற்றது. அத்தாக்குதலில் இருந்து ஜனாதிபதியின் சகோதரர் மயிரிழையில் உயிர் தப்பினார்.

1982 நவம்பர் முதல் 18,742 வி.புலிகள் இயக்கப் போராளிகள் உயிரிழந்துள்ளனர். இவர்களில் 818 போராளிகள் 2006ல் உயிரிழந்து உள்ளனர். இம்மாவீர தின உரை பற்றிய உள்ளூர் சர்வதேசப் பார்வைகள் உள்ளே. (பக் 03)

**உண்மைகள் உறங்குவதில்லை.**

10 டிசம் - 23 டிசம் 06, குரல் 05

லண்டன் குரல்

## ஊடகம்

ரிபிசி மீதான தாக்குதல் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது. இத் தாக்குதல் திட்டமிட்டு அரசியல் காரணங்களுக்காக மேற்கொள்ளப்பட்டு இருந்தால் என்ன அல்லது தனிப்பட்ட கோபதாபங்களுக்காக கடதாசிப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டிருந்தால் என்ன இவ்வாறான செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டியது ஜனநாயகத்தை விரும்பும் ஒவ்வொரு வரதும் கடமை.

தாயக மண்ணில் அரச பயங்கரவாதம், தமிழ் ஆயுதக் குழுக்களின் பயங்கரவாதம் என்பவற்றில் இருந்து தப்பி இந்த மண்ணின் ஜனநாயக உரிமைகளை அனுபவித்துக் கொண்டு மற்றையவர்கள் அதனை அனுபவிப்பதைத் தடுப்பது எந்தவகையிலும் அனுமதிக்க முடியாத ஒன்று.

அரசியல் முரண்பாடுகளையும் தனிநபர் முரண்பாடுகளையும் தீர்த்துக் கொள்ள வன்முறையை பிரயோகிப்பதை அனைத்து ஊடகங்களும் வன்மையாகக் கண்டிக்க வேண்டும். யார் யாருக்கு எதிராக பயன்படுத்துகிறார்கள் என்று ஆராய்ச்சி செய்து கண்டனம் செய்வதை ஊடகங்கள் முதலில் நிறுத்தி புலம்பெயர்ந்த சமூகத்திலாவது ஒரு ஜனநாயகச் சூழலை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும்.

சர்வதேச மனித உரிமைப் பிரகடனத்தின் 19வது பிரிவு, "ஒவ்வொருவரும் கருத்துக் களைக் கொண்டிருக்கவும் வெளியிடவும் உரிமை உடையவர்கள்; இது தடையின்றி கருத்துக்களைக் கொண்டிருக்கவும் எல்லைகளைக் கடந்தும் எந்த ஊடகத் துக்கூடாகவும் தகவல்களையும் எண்ணங் களையும் தேடவும், பெறவும் பரிமாறவுமான உரிமையை உள்ளடக்குகிறது" என்கிறது.

ரிபிசி மீதான தாக்குதலை கண்டிப்பதற்கு ரிபிசி யினுடைய கருத்துக்களுடன் உடன்பட வேண்டிய தில்லை. தனது கருத்துக்களை சுதந்திரமாக முன் வைப்பதற்கு ரிபிசிக்கு உள்ள உரிமையை பறிப்பதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது.

இவ்வளவு சிக்கல்கள் மத்தியிலும் வானொலியை இயக்கும் சிவஜினி ராம்ராஜ் பாராட்டப்பட வேண்டியவரே. அவரது துணிச்சலுக்கு ஒரு சபாஸ்.

ஆசிரியர்: த ஜெயபாலன்
ஆசிரியர்குழு: Dr பி சிவக்குமார், ஆர் சுரேஸ்குமார், ஜோ ஜெயவேந்தன்
நிர்வாகம்: ரி கொன்ஸ்ரன்ரைன்

Voice of London Tamils
P O Box 35806
London, E11 3JX, UK

செய்தித் தொடர்பு: 020 8279 0354
நிர்வாகத் தொடர்பு: 079 1944 4994

'லண்டன் குரல்' பத்திரிகை Thesam Publication Ltd இனால் மாதமிரு முறை வெளியிடப்பட்டு வருகிறது. இதில் வெளிவரும் கருத்துக்கள் எப்பொழுதும் 'லண்டன் குரல்' பத்திரிகையினதோ அல்லது வெளியீட்டாளர்களினதோ கருத்துக்களாக இருக்கும் என்பதில்லை. இப்பத்திரிகையில் உள்ள செய்திகள் உண்மையான தகவல் மூலங்களில் இருந்து பெறப்பட்ட சரியான தகவல்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பிரசுரிக்கப்பட்டு உள்ளது. இருப்பினும் இதில் வரும் தவறுகளுக்கு வெளியீட்டாளர்கள் பொறுப்பல்ல.

## இரு பரம்பரையை சில விநாடிகளில் அழித்த மின் உபகரணம்

அக்சனா ரவீந்திரன்(2), தாத்தா, பாட்டி வேலுப்பிள்ளை சிவஞானம், தனலக்ஸ்மி சிவஞானம் ஆகியோரைப் பலி கொண்ட தீ விபத்திற்கு, சீரற்ற முறையில் இணைக் கப்பட்ட மின்உபகரணமே (badly fitted plug) காரணம் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இவ்விபத்து யூலை 3ல் விம்பிள்டனில் நிகழ்ந்தது. சரியாக சொக்கற்றில் பொரத்தப்படாத எயர்கொன்டிசினரின் பிளக்கினாலேயே இது நிகழ்ந்துள்ளது என நவம்பர் முடிவில் இடம்பெற்ற விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கசிந்த மின்சாரம் அருகில் இருந்த குளிருட்டியை உருக்கி தீயை ஏற்படுத்த, கடையில் இருந்த பொருட்களுக்குப் பரவி கட்டடம் முழுவதையும் ஆட்கொண்டது என அங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

## பிரித்தானியாவில் வறியவர்களைக் கடினமாகத் தாக்கும் நீரழிவுநோய்

பிரித்தானியாவின் மிக ஏழ்மையில் வாழும் சமூகங்கள், வகை-2ஐ சேர்ந்த நீரழிவு நோயினால் கூடுதலாகப் பாதிப்படைகின்றனர். ஏழ்மையில் வாழும் சமூகங்கள் ஏனைய வசதி படைத்தவர்களை விட இரண்டரை மடங்கு அதிகமாக பாதிக்கப்பட இடமுண்டு என ஆய்வுகள் காட்டுகின்றன. நீரழிவு சம்பந்தமாக ஈடுபாடு கொண்ட அமைப்புகளால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வறிய மக்கள் நீரழிவின் பாரதூரமான விளைவுகளான இருதய நோய் பாரிசவாதம். சிறுநீரகப் பாதிப்பு என்பவற்றால் மூன்றரை மடங்கு அதிகமாகப் பாதிக்கப்படுவார்கள் எனக் கூறுவதுடன் சமூக ஏற்றத்தாழ்வை கையாள்வதற்கு மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் கோரியுள்ளது.

## போதைவஸ்து ஏஜன்ட் ஒரு பாரிஸ்டர்

தனது மாமக்குடியிருப்பில் கொக்கேயின் உற்பத்தித் தொழிற்சாலையொன்றை தனது பங்காளியான போல் மோர்டொக் என்ற ஆயுத வியாபாரியுடன் இணைந்து நடத்திவந்த லண்டன் பாரிஸ்டர் ஒருவர் கையும் களவுமாகப் பிடிபட்டுள்ளார். போதைவஸ்து தாதாவான அந்த ஆயுத வியாபாரியுடன் இவரது விசித்திரக் கூட்டின்மூலம் சட்டத்தின் கண்களுக்கு டிமிக்கி கொடுத்து நடத்திய நாடகம் இரகசிய வீடியொ கமராவினால் பதியப்பட்டு வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

ஹசன் மொட்ஜிரி என்ற இந்த பாரிஸ்டர் நொட்டிங் ஹில் பகுதியைச் சேர்ந்தவர். பட்டம்பெற்ற பின்னரும் தொழில்புரியும் வாய்ப்பினை இவர் பெற்றிருக்கவில்லை. இவரது இருப்பிடத்தை ஆயுதப் பொலிசார் சூழ்ந்து உடைத்து உட்புகுந்த வேளையில் ஒரு கிலோகிராம் பெறுமதியான கொக்கெயின் போதைவஸ்து அவரது வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது. இதன் சந்தைப்பெறுமதி 150 ஆயிரம் பவுண்களாகும்.

பிளாக்பிரையர்ஸ் நீதிமற்ற நீதிபதி ஜோன் ஹில்லென் இருவருக்கும் தலா 9 ஆண்டு சிறைத்தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளார்.

## தாக்குதலுக்கு உள்ளான ரி.பி.சி வானொலி மீண்டும் வானலைகளில்



நவம்பர் 24ல் தாக்குதலக்கு உள்ளான ரிபிசி வானொலி ஒரு வார காலத்திற்குள் மீண்டும் தனது வானொலிச் சேவையை ஆரம்பித்து உள்ளது. நள்ளிரவு வானொலி நிலையத்திற்குள் புகுந்த சிலர் வானொலி உபகரணங்களை சேதப்படுத்தியும் களவாடியும் உள்ளனர்.

இச்சம்பவம் ஒரு கொள்ளை என்பதிலும் அந்த ஊடகத்தை இயங்கவிடாமல் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட ஒரு விசமச்செயல் என வானொலி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. "எமது ஜனநாயகக் குரல் எவ்வளவு வலிமையானது என்பதையே இக்கொடுஞ் செயல்கள் எமக்கு உணர்த்துகின்றன" என இத்தாக்குதல் தொடர்பாக விடுக்கப்பட்ட செய்திக் குறிப்பில் வானொலி இயக்குநர்களில் ஒருவரான தம்பா தெரிவித்திருந்தார்.

"வன்முறையினாலும், பயங்கரவாதத்தி னாலும், மிரட்டல்களினாலும் மக்களின் குரலை ஒடுக்கி அதன் மூலம் தமது காட்டுத் தர்பார் அரசியலை நடத்தி வரும் ஜனநாயக விரோத சக்திகளின் ஈனத்தனமான செயலே இது" என மிகவன்மையான கண்டன அறிக்கையை வெளியிட்டுள்ளது ரிபிசி நிர்வாகம். "சில தொழில் நுட்பக் கருவிகளை திருடுவதன் மூலம் அல்லது அழிப்பதன் மூலம் மக்களின் குரலை ஒடுக்கி விடலாம் என நப்பாசை கொண்டிருக்கும் இச்சமூக விரோத சக்திகள் தற்காலிகமாகவே வெற்றி பெற்றுள்ளார்கள் என்பதை காலம் உணர்த்தும்" என்றும் அவ்வறிக்கையில் ரிபிசி தெரிவித்து உள்ளது.

வானொலியை மீண்டும் பலமுள்ள வகையில் பாதுகாப்புடன் செயற்படுத்து வதற்கு சுமார் 20,000 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்டுகள் தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

ரிபிசி வானொலி தாக்குதலுக்கு உள்ளானது இது முதற்தடவையல்ல. 1999ல் ஆரம்பிக்கப்பட்ட இவ்வானொலி இதற்கு முன்னரும் மூன்று தடவைகள் தாக்கப்பட்டு உள்ளது.

இவ்வாண்டு இவ்வானொலி நிலைய அறிவிப்பாளர்கள் மற்றும் ஆய்வாளர்களை மிரட்டியது மற்றும் சட்டவிரோதமாக செயற்பட முற்பட்டது தொடர்பான வழக்கு ஒன்று ஹரோ மஜிஸ்ரேட் நீதிமன்றில் வரும் மார்ச் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. தமோதரம்பிள்ளை அனசிறீஸ்குமார் (ராஜன்), சேதுருபன் நடராஜா (சேது) (படம்), உதயசேகரன் கந்தையா (உதயன்) ஆகியோர் மீதே காவல்துறையினர் வழக்கை பதிவு செய்துள்ளனர். இதில் முன்னைய இருவரும் ரிபிசியில் பணிபுரிந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



ரிபிசி வானொலியில் தனிப்பட்ட மற்றும் அரசியல் மசாலா காரணங்களால் ஏற்பட்ட பிளவைத் தொடர்ந்து வெளியெறிய ராஜன், சேது, வாசுதேவன் (கண்ணன்) ஆகியோர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நிலையை எடுக்க ரிபிசி வானொலி பணிப்பாளர் ராம்ராஜ் தீவிர புலியெதிர்ப்பு நிலைப்பாட்டை எடுத்தார். மேலும் விடுதலைப் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டு விடுவிக்கப்பட்ட ஆர் ஜெயதேவன், விவேகானந்தன் ஆகியோர் வானொலியின் அரசியல் கலந்துரையாடல்களில் மைய இடத்தை பெற்றிருந்தனர். இவ்விரு அணியினருக்கும் இடையே வெளிப்படையான பகைமை காணப்பட்டது. துண்டுப் பிரசுரங்கள், இணையத் தள பிரசுரங்கள், முதல் நீதிமன்றம் வரை இம்மோதல் தொடர்கிறது.

## மலேசியாவில் உலகத்தமிழ் வாசகர் மாநாடு



டாத்தோ சாமி வேலு

உலகத் தமிழ் வாசகர் மகாநாட்டு ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. மலேசியா தலைநகர் கோலாலம்பூரில் இம் மாகாநாடு நடைபெறவுள்ளது. இம்மாநாட்டுக்கு செஞ்சொல் தமிழ்மிகு ஈழவேங்கையனார் தலைமையேற்க உள்ளார். பொதுப் பணித்துறை அமைச்சர் டத்தோ ச. சாமிவேலு இம் மாநாட்டைத் தொடக்கிவைக்க அழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.

கருத்தரங்கு, கவியரங்கு, புத்தகக் காட்சி, கலைநிகழ்ச்சி முதலானவை இடம்பெறுகின்றன. கவிஞர் மா.தமிழன்பன் கவியரங்கு ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகவும், சிங்கப்பூர், இந்தியா, ஐக்கிய இராச்சியம், கனடா, ஜேர்மன், சுவிட்சர்லாந்து, அவுஸ்திரேலியா பிரான்ஸ் முதலான நாடுகளிலிருந்து பேராளர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்ள உள்ளனர்.

தமிழ் இனவளர்ச்சி, தமிழர் இன மேம்பாடு தொடர்பான கட்டுரைகளைப் பிரசுரத்திற்காக அனுப்பி வைக்க விரும்புவோரும் இம்மாநாட்டில் பங்கேற்க விரும்புவோரும் மகாநாட்டு ஏற்பாட்டுக் குழுத் தலைவர் ஈழவேங்கையனார் Eelam Kalvi Kazhagam, P.O.Box No.13030, 50796 kualaumpur, Malasia என்ற முகவரியாளருடன் அல்லது E.mail rescue247@yahoo.com உடன் தொடர்புகொள்ளலாம். (தகவல்: ஐ ரி சம்பந்தன்)

# புஸ்ஸின் பயங்கரவாதப் பட்டியல் தயாரிக்க வழங்கப்பட்ட அதிகாரத்தை நீதிபதி நிராகரித்துள்ளார்

செப்ரம்பர் 11 இரட்டைக் கோபுரங்கள் மீதான தாக்கதலை அடுத்து அமெரிக்க ஜனாதிபதி புஸ்க்கு வழங்கப்பட்ட விசேட அதிகாரங்களின் (Executive Order 13224) ஒரு பகுதி அரசியலமைப்பிற்கு முரணானது என அமெரிக்க மாவட்ட நீதிபதி Audrey Collins நவம்பர் 21ல் தீர்ப்பளித்து உள்ளார். இந்த அதிகாரங்களின் கீழேயே சர்வதேச பயங்கவாதப் பட்டியல் தயாரிக்கப்பட்டது. Humanitarian Law Project இந்த அதிகாரத்துக்கு எதிராக தொடுத்த அரசியல் சட்ட வழக்கின் போதே இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதன்படி பயங்கரவாதக்குழுக்களுக்கு உதவுபவர்கள் மற்றும் தொடர்பு உடையவர்களது ("assists, sponsors or provides services to" or is "otherwise associated with") சொத்துக்களை சுவிகரிக்க சுங்கப்பிரிவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. இதன் படி விடுதலைப் புலிகளதும் குர்திஸ் மக்களின் விடுதலைக்காகப் போராடி வந்த Partiya Karkeran Kurdistan - PKK உடனும் தொடர்புடையவர்களின் சொத்துக்களை அரசாங்கம் சுவிகரிப்பதை இந்த தீர்ப்பு தடுக்கின்றது. அரச தரப்பு வழங்கறிஞர்கள் அடுத்த கட்ட நடவடிக்கை பற்றிய தமது முடிவை அறிவிக்கவில்லை.

மனித உரிமைகள் பற்றிய பயிற்சியும் மனிதாபிமான உதவிகளையும் வழங்கும் Humanitarian Law Project, பயங்கரவாதப் பட்டியலில் உள்ள குழுக்களுக்கு சேவைகளை வழங்குவது தடுக்கப்பட்டிருப்பதை நீதிபதி அனுமதித்து உள்ளார். இதனை அனுமதித்ததற்கு எதிராக Humanitarian Law Project, மேன்முறையீடு செய்ய உள்ளது.

இத்தீர்ப்பை வோசிங்டனை தளமாகக் கொண்டு இயங்கும் Center for Constitutional Rights சட்டத்தரணி டேவிட் கோல் வரவேற்றுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட இந்த அதிகாரங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பயங்கரவாதப்பட்டியல் தொடர்பாக நூற்றுக்கும் மேற்பட்ட சரத்துக்குள் உள்ளது. இந்தத் தீர்ப்பு அவற்றைப் பாதிக்காது என டேவிட் கோல் தெரிவித்துள்ளார். பயங்கரவாதத்தை அழிப்பதற்காக blank-cheque வழங்க முடியாது என அவர் குறிப்பிட்டார்.

# 'பாலா அண்ணா' இல்லாத மாவீரர்தினம்

சுகவீனம் காரணமாக நவம்பர் 27ல் இடம்பெற்ற லண்டன் மாவீரர் தின நிகழ்வுகளில் வி.புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கலந்துகொள்ளவில்லை. இவர் மோசமான புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளார். அவரது உடல்நிலை மிகவும் மோசமடைந்துள்ளது. உடலின் முக்கிய அவயவங்கள் எங்கும் புற்றுநோய் பரவியுள்ளது.

தனது அறுபத்தெட்டாவது வயதில் உள்ள இவர் கடந்த 35 வருடங்களாக நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். இவரது இரு சிறுநீரகங்களும் ஒன்றன் பின் ஒன்றாகச் செயலிழந்து போக போராளி ஒருவர் அளித்த சிறுநீரகத்திலேயே இவர் உயிர்வாழ்கிறார். நீரிழிவு, சிறுநீரகச்சிக்கல், இருதய நோய் என இவ்வாண்டு அவரது வாழ்வு வைத்தியர் களுடனேயும் வைத்தியசாலையிலுமாக அமைந்துவிட்டது.

வி.புலிகளின் தலைவர் வே பிரபாகரனின் உரைக்கு விளக்கவுரை வழங்கி அத்துடன் கிலகிலுப்பூட்டி கைதட்டுக்களைப் பெறும் அன்ரன் பாலசிங்கம் கலந்து கொள்ளாததால் லண்டன் நிகழ்வுகள் சோபையிழந்ததாக அமைந்திருந்தது.

"சந்திரிகாவை நான் வைச்சிருக்கிறதா? தம்பி வைச்சிருக்கிறதா?", "பாங்கொக்கு பேச்சு வார்த்தைக்கு போனவை ரெட்லைட் ஏரியாவுக்கு போனது" என ஒவ்வொரு ஆண்டு மாவீரர் தின உரையிலும் ஒரு சர்ச்சையை ஏற்படுத்த அன்ரன் பாலசிங்கம் தவறுவதில்லை. இம்முறை மாவீரர் தின நிகழ்வில் பாலா அண்ணா கலந்து கொள்ளாதது புலியெதிர்ப்பு இணைய ஊடகங்களுக்கு கிசு கிசு இல்லாதது போலாகி விட்டது.

இம்முறை லண்டன் மாவீரர் நிகழ்வுகள் வழமைக்கு மாறாக நான்கு வெவ்வேறு பகுதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேலும் நிகழ்வுகளுக்கான இடங்களும் கடைசி நேரத்திலேயே அறிவிக்கப்பட்டிருந்தது. லண்டன், ரொறன்ரோ போன்ற நகரங்களில் புலியெதிர்ப்பு குரல்கள் வலுவடைவதைத் தொடர்ந்தே இந்த கடைசி நேர அறிவிப்பு இடம்பெற்றதாக தெரியவருகிறது.

கனடா ரொரன்ரோவில் மாவீரர் தின நிகழ்வுகள் நடத்த இருந்த மண்டபங்களை அதன் நிர்வாகங்கள் கடைசி நேரத்தில் இரத்து செய்ததாக கனடாவில் இருந்து கிடைக்கப் பெற்ற செய்திகள் தெரிவிக்கின்றன. மாவீரர் தின நிகழ்வுகள் ஐந்து நகரங்களில் நடைபெறும் என விளம்பரம் செய்யப்பட்ட போதும் அவை இரத்து செய்யப்பட்டதால் கடைசி நேரத்தில் வேறு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டிய நிலை அங்கு ஏற்பட்டது.

அன்ரன் பாலசிங்கம் உயிர் வாழக் கூடிய காலம் குறித்து வைத்தியர்கள் திருமதி அடேல் பாலசிங்கத்துக்குத் தெரியப்படுத்தியிருப்பதாகத் தெரியவருகிறது. தற்போது புற்றுநோயுடன்



தனது உயிருக்காகப் போராடி வருகிறார் அன்ரன் பாலசிங்கம்.

பல்வேறுபட்ட அரசியல் முரண்பாடுக ளுக்கும் அப்பால் அன்ரன் பாலசிங்கம் தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் இணை பிரியாத ஒரு வரலாறு என்பது யாராலும் மறுக்க முடியாத ஒன்று.

# சர்வதேச ஊடகங்களில் பிரபாவின் உரை

The Hindu

27/11/2006

## LTTE celebrates `Hero's Day' today

All attention in the island nation would be focused on the so-called `Hero's Day' annual speech of LTTE chief Velupillai Prabhakaran scheduled to be delivered on Monday. The speech is a policy statement of the Tamil Tigers for the year and on Sunday Mr. Prabhakaran turned 52.

The Guardian

Tuesday November 28, 2006

## Ceasefire over as Tamil Tigers' leader calls for independence

The Tamil Tigers' reclusive leader last night effectively ended the rebels' support for the 2002 ceasefire with the government of Sri Lanka, saying that it was "defunct". In his annual address to the island nation's Tamil population, Velupillai Prabhakaran put the government on notice that war was the only option left for his guerrilla forces.

Los Angels Times

November 28, 2006

## Tamil Tiger rebel leader calls truce 'defunct'

The leader of the Tamil Tigers rebel group blamed the Sri Lankan government Monday for rendering a 4-year-old cease-fire "defunct" and said his organization had no choice but to press for an independent homeland for the island nation's minority Tamils.

BBC

November 28, 2006

## Tamil statehood 'is only option'

Sri Lanka's Tamil Tiger rebels have "no option" but to push for an independent state, their leader has said. Prabhakaran said a truce with the military was "defunct" and accused the government of unleashing war on Tamils.

Reuters

Mon, Nov 27, 2006

## Sri Lanka Tiger rebels resume independence struggle

The Tamil Tigers declared on Monday they now saw no other option than to push for independence in what analysts said was notice to Sri Lanka's government they are resuming their struggle and renewed civil war will deepen.

Indo-Asian News Service

November 28, 2006

## Mahinda slights Prabhakaran's resolve

Sri Lankan President Mahinda Rajapaksa on Tuesday said he was not taking "seriously" Tamil Tigers chief Velupillai Prabhakaran's threat to resume his armed campaign for an independent Tamil state.

NDTV

Tuesday, November 28, 2006

## Sri Lanka President rejects war threat

The President of Sri Lanka has dismissed a threat by separatist rebels to renew their fight for an independent Tamil state. President Rajapakse said he is not worried and said Prabhakaran has been saying it all along.

AFP

Tue Nov 28, 2006

## US condemns Sri Lankan rebels for 'fueling violence'

The United States condemned Sri Lanka's Tamil Tigers rebels for demanding an independent state and ending a 2002 ceasefire. "We condemn the Tamil Tigers for fueling violence and hostility. Violence and terrorism do nothing to advance the resolution of the conflict," said State Department spokesman Sean McCormack.

**உண்மைகள் உறங்குவதில்லை.**

# சிலியின் புரட்சித் தலைவி மிஷேல்



சாதாரண குடும்பத்தில் பிறந்த 54 வயதுடைய மிஷேல் சிலி நாட்டின் புதிய அதிபர். தீவிர கடவுள் நம்பிக்கை உடைய பழமைவாத கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் வாழும் நாடு அது. இன்று அதன் அதிபர் ஒரு நாத்திகர். இரண்டு வருடங்களுக்கு முன் வரை அந்த நாட்டில் விவாகரத்து சட்டவிரோதமானது. இன்று அதன் அதிபர் இரண்டு முறை விவாகரத்து செய்த பெண்மணி. நம்பமுடியாத சாதனைக்கு சொந்தக்காரர் மிஷேல். இவர் தனது புதிய அமைச்சரவை ஆண், பெண் சமத்துவத்தைப் பேணுவதாக அமையும் எனக் கூறுகிறார். இந்த அமைச்சரவையில் 10 ஆண்கள் இடம்பெற்றால் 10 பெண்களும் இடம்பெறுவர். இந்நாட்டில் முக்கியமான மொத்தம் 300 பதவிகளிலும் சரி பாதி பெண்களே நியமிக்கப்படுவார்கள் என்று அறிவித்திருந்தார்.

நான் அதிபராக இருக்கும் ஆட்சிக் காலத்தில் 800 மழலைகளுக்கு அரச நிதி உதவியுடன் பள்ளிகளைத் தொடங்கப் போகிறார். அதோடு 60 வயதுக்கு மேற்பட்ட முதியோருக்கு இலவச சிகிச்சை அளிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்போகிறார். புதிய ஆட்சியில் மிஷேல் முதலில் சுகாதார அமைச்சராகவும் பின்னர் இராணுவ அமைச்சராகவும் தெரிவுசெய்யப்பட்டார். ஆனால் எந்த இராணுவம் அவரையும் அவரது குடும்பத்தாரையும் சித்திரவதை செய்ததோ அதே இராணுவத்துக்கு இவர் அமைச்சரானார். ஆனால் பழி வாங்கும் குணம் இவரிடமில்லை.

தான் அனுபவித்தது அடுத்த தலைமுறைக்கு ஏற்படவே கூடாது என்பது தான் அவருடைய அக்கறை. தனியாகவே தனது வாழ்வில் போராடி நல்ல தாயாகவும் நல்ல தலைவராகவும் பல பொறுப்புகளில் தன்னை நிலைநிறுத்தி வெற்றி கண்டுள்ளார். உலகில் உள்ள அனைத்துப் பெண்களுக்கும் நல்ல ஒரு வழிகாட்டியாகத் திகழ்கிறார் என்றால் மிகையாகாது.

# ராதிகா குமாரசுவாமி ஐ.நா வின் விசேட பிரதிநிதி

ஆயுத மோதல்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் விசாரணை ஆணைக்குழுவின் விசேட பிரதிநிதியாக கலாநிதி ராதிகா குமாரசுவாமி 27 பெப் 2006 இல் நியமிக்கப்பட்டுள்ளார்.

சட்டத்தரணியான இவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராக விளங்குகின்றார். இவர் மே 2003ல் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். அந்த நேரத்தில் கொழும்பிலுள்ள இனத்துவ ஆய்வுகளுக்கான சர்வதேச நிலையத்தின் பணிப்பாளராகவும் செயற்பட்டு வந்தார். இனத்துவ ஆய்வுகளின் பெண்களின் நிலமை என்பன பற்றி இவர் எழுதிய கட்டுரைகளும் குறிப்பிடத்தக்கவை. பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றிய ஐ.நா சபையின் முதலாவது விசேட தொடர்பாளராக இவர் ஆற்றிய பணி இவரது சேவைகளுக்கெல்லாம் மகுடம் போன்று விளங்குகின்றது. நவம்பர் 2005ல் இலங்கை ஜனாதிபதியினால் தேசமானிய விருதும் இவருக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இந்த விருதைப் பெற்ற ஒரே பெண்மணி இவரே என்பது குறிப்பிடத்தக்கது.



ஐ நாவில் ராதிகா குமாரசுவாமி

இவர் சமீபத்தில் எழுதி வெளியிட்ட Born free and Equal Women's International Human Rights என்ற நூல் இவர் குறிக் கோளாக கொண்ட வாழ்க்கை பணியின் எழுத்து வடிவமாக மிளிர்கிறது.

தொகுப்பு: பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் (Women's Education & Research Centre)

## யுனெஸ்கோ குலேமோ கானோ விருது பெற்ற பெண் லெபனான் ஊடகவியலாளர்

2006 ம் ஆண்டுக்கான யுனெஸ்கோ Guillermo Cano World Press Freedom விருது லெபனான் நாட்டைச் சேர்ந்த மேஜிடியெக் என்ற ஊடகவியலாளருக்கு கொழும்பில் வழங்கப்பட்டது. இவ்விருதை யுனெஸ்கோ நிறுவனப் பணிப்பாளர் நாயகம் கொய்கரோ மட்சுரா வழங்கினார். இவ் வைபவம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.



1986ம் ஆண்டில் குலேமோ கானோ என்ற 27 வயதுடைய கொலம்பியா நாட்டு ஊடகவியலாளர் கடமை நேரத்தின் போது குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார். இவரது நினைவாக 1997ம் ஆண்டு முதல் வருடா வருடம் உலக ஊடக சுதந்திர தினத்தின் போது யுனெஸ்கோ கானோ விருது வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதைப் பெற்றுக் கொள்வதற்காக மேஜிடியெக் தனது தாயாருடனும் இரு சகோதரிகளுடனும் கொழும்புக்கு வருகை தந்துள்ளார்.

மேஜிடியெக் பேரூட்டில் நடந்த கார்குண்டு தாக்குதலில் இடது காலையும் இடது கையையும் இழந்துள்ளார். ஆனால் தீவிரவாதிகளுக்கு எதிராக தான் பணிவதில்லை என கூறினார். தீவிரவாதிகளின் செயல்கள் ஜனநாயக வழிமுறையினை மீறும் செயலாகும். எல்லோரும் ஒன்று கூடி தடுப்பதற்கு குரல் கொடுக்க வேண்டும் என்றார்.

## சர்வதேசப் போட்டியில் தமிழ் வீராங்கனை

அவுஸ்திரேலியாவில் அண்மையில் இடம்பெற்ற சர்வதேச வலைப்பந்தாட்டப் போட்டியில் இலங்கை அணியின் சார்பில் மைதிலி இராசரத்தினம் என்ற ஒரே தமிழ் வீராங்கனை இடம்பெற்றிருக்கிறார். யாழ்ப்பாணம் சுன்னாகம் கிழக்கைச் சேர்ந்த இராசரத்தினம் ரஜனி தம்பதியினரின் புதல்வியான மைதிலி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் 2007ம் ஆண்டு க.பொ.த.உயர்தரப் பரிட்சைக்குத் தோற்றவுள்ள மாணவியாவார்.

இப்பாடசாலையின் 19 வயதுக்கட்பட் டோருக்கான அணியில் மைதிலி விளையாடி வருகின்றார். பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 42 அணியினர் போட்டியிட்ட சர்வதேசிய மட்ட வலைபந்தாட்டப் போட்டியில் இலங்கை அணி இறுதிச் சுற்றுவரை முன்னேறி மலேசிய அணியுடன் போட்டியிட்டு இறுதியில் தோல்விகண்டது.

## பெண்

நரஞ்சினி கவிதைகள்



நாம் நாமாகத் தான் பிறந்தோம்
நீங்கள் உருவாக்க முயன்றும்
நாம் நாமாகத் தான் உள்ளோம்
நாம் எதையுமே இழக்கவில்லை
அதை உங்களிடமிருந்து பெறுவதற்கு
நாம் அடிமை என்றும் சொன்னீர்கள்
அதற்கு எதிர்குரலும் கொடுத்தீர்கள்

வலிகள், வேதனைகள், கொடுமைகள் இருந்தும்
நாம் நாமாகத் தான் உள்ளோம்

உங்களுக்கு அடிமை எனச் சொல்லவும், நீங்கள் பேசுவதற்கு
கருவாக இருக்கவும்
நாம் ஒருபோதும் விரும்பியதில்லை
இப்போதெல்லாம் உங்கள் எழத்துக்கள், பேச்சுக்கள்
எம் பற்றியதாக அல்லது எம்மைச் சேர்ந்ததாக

எமக்காக எதையுமே செய்ய நாம் அனுமதிக்காத போது கூட
கிபிக்கு முன் கிபிக்கு பின்
நாம் உங்களால் சிறகொடிக்கப்பட்டிருக்கலாம்

இப்போ
நாம் நாமாக ஆகிவிட்டது கூடத்தெரியாமல் அல்லது தெரிந்து
கொள்ள விரும்பாமல்
அல்லது ஏற்றுக்கொள்ள முடியாமல் கற்பனையில் கனவு கண்டு
உங்கள் ஆசைகளை நிறைவேற்றுகிறீர்கள்
நாம் எதையுமே அனுமதித்ததில்லை, நீங்களாக வருகிறீர்கள்,
நீங்களாக உடைபடுகிறீர்கள்
ஆனால் நாம் நாமாக இருப்பதை மட்டும் உங்களால் இன்னமும்
இன்னமும்.........
நாம் நாமாகத் தான் பிறந்தோம் நாம் நாமாகவே இருக்கிறோம்.

# THIS UNIVERSAL DECLARATION OF HUMAN RIGHTS

Article 11. (1) Everyone charged with a penal offence has the right to be presumed innocent until proved guilty according to law in a public trial at which he has had all the guarantees necessary for his defence.

(2) No one shall be held guilty of any penal offence on account of any act or omission which did not constitute a penal offence, under national or international law, at the time when it was committed. Nor shall a heavier penalty be imposed than the one that was applicable at the time the penal offence was committed.

Article 12. No one shall be subjected to arbitrary interference with his privacy, family, home or correspondence, nor to attacks upon his honour and reputation. Everyone has the right to the protection of the law against such interference or attacks.

Article 13. (1) Everyone has the right to freedom of movement and residence within the borders of each state.

(2) Everyone has the right to leave any country, including his own, and to return to his country.

Article 14. (1) Everyone has the right to seek and to enjoy in other countries asylum from persecution.

(2) This right may not be invoked in the case of prosecutions genuinely arising from non-political crimes or from acts contrary to the purposes and principles of the United Nations.

Article 15. (1) Everyone has the right to a nationality.

(2) No one shall be arbitrarily deprived of his nationality nor denied the right to change his nationality.

Article 16. (1) Men and women of full age, without any limitation due to race, nationality or religion, have the right to marry and to found a family. They are entitled to equal rights as to marriage, during marriage and at its dissolution.

(2) Marriage shall be entered into only with the free and full consent of the intending spouses.

(3) The family is the natural and fundamental group unit of society and is entitled to protection by society and the State.

Article 17.

(1) Everyone has the right to own property alone as well as in association with others.

(2) No one shall be arbitrarily deprived of his property.

Article 18. Everyone has the right to freedom of thought, conscience and religion; this right includes freedom to change his religion or belief, and freedom, either alone or in community with others and in public or private, to manifest his religion or belief in teaching, practice, worship and observance.

Article 19. Everyone has the right to freedom of opinion and expression; this right includes freedom to hold opinions without interference and to seek, receive and impart information and ideas through any media and regardless of frontiers.

Article 20. (1) Everyone has the right to freedom of peaceful assembly and association.

(2) No one may be compelled to belong to an association.

( continued on next issue )

## - சிறுவர் குரல் -

சிறுவர் குரல் பகுதியில் உங்கள் ஆக்கங்களும் இடம்பெற விரும்பினால் அவற்றை எமக்கு எழுதி அனுப்பிவைக்கவும். சிறுகதை, கவிதை, கட்டுரைகள், துணுக்குகள், நிகழ்வுகள், உங்கள் விடுமுறைப் புகைப்படம் எனப் பலவற்றையும் இப்பகுதியில் சேர்த்துக் கொள்ள உள்ளோம்.

This poem was written to my brother after he was diagnosed with aids. If you love someone don't walk away from them when times get hard. That is the time the love between you will blossom to the fullest. Let your love grow.

## AIDS

by Judy Burnette

AIDS was always just a word
yet now it bears your name;
But it has not changed how I feel
I love you just the same.

We should never judge another
with thoughtless words or deeds;
For we all have within us
wounds that have made us bleed.

So you have an illness
none of us quite understand;
It doesn't make you less a person
nor less a man.



You are still that same sweet person
that I have always known;
No matter the distance between us
in my heart you will always have a home.




## குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்புச் சுவரொட்டி கிளப்பிய சர்ச்சை

UNICEF நிறுவனம் தனது சர்வதேச குழந்தைத் தொழிலாளர் அவலம் பற்றிய தனது சுவரொட்டியொன்றில் இந்தியாவின் பீகார் மாநிலச் சிறுமியொன்றின் புகைப்படத்தை அண்மையில் பிரசுரித்துள்ளமை, பீகார் மாநில முதல்வர் நிட்டிஷ் குமாரை சிக்கலில் மாட்டியுள்ளது. எட்டு வயதான சுண்ணம்குமாரியின் புகைப்படமே UNICEF நிறுவனத்தின் விழிப்புணர்வு விளம்பரத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அண்மைக்காலத்தில் இந்தியா 14வயதுக்குட்பட்ட சிறுவர்கள் வீட்டிலிருந்தோ, உணவகங்களிலோ தொழில்புரிவதை சட்டமூலம் தடைசெய்துள்ள நிலையில் பீகார் மாநிலத்தில் சுண்ணம்குமாரியின் புகைப்படம் உலகளாவியரீதியில் சுவரொட்டிகளில் பிரசுரமாகியள்ளது. தான் நாளொன்றுக்கு 12 மணிநேரம் தந்தையின் தெருவோரத்து உணவகமொன்றில் பணியாற்றுவதாக அச்சிறுமி தெரிவித்துள்ளார்.

UNICEF நிறுவனம் இப்புகைப்படத்தினைப் பிரசுரிப்பதற்கான உரிமையை அவளது தந்தை பாலேஸ்வரதாஸிடமிருந்து எழுத்துமூலம் பெற்றுள்ளதாகத் தெரிவித்திருக்கின்றது. அவரோ தன்னிடமிருந்து எவரும் அத்தகையதொரு கடிதத்தைப் பெறவில்லை என்று சாதிக்கின்றார்.

இந்நிலையில் பீகார் முதல்வர், சிறுமி சுண்ணம்குமாரியின் புனர்வாழ்வு தொடர்பாக சமூகநலத்துறையினரிடம் அறிக்கையொன்றினைத் தான் கேட்டிருப்பதாகவும், அவளது தந்தையின் அனுமதியின்றி யுனெஸ்கோ அப்படத்தைப் பிரசுரித்துள்ளதா என்பதையும், அவரது கையெழுத்து மோசடிசெய்யப்பட்டுள்ளதா என்பதையும் பற்றி அறியும்படி தனது அதிகாரிகளைப் பணித்திருப்பதாகவும் பத்திரிகையாளர்களிடம் மாநில முதல்வர் தெரிவித்துள்ளார்.

வறுமை காரணமாக இந்தியாவில் மாத்திரம் இன்றைய நிலையில் 12.6மில்லியன் சிறுவர்கள் குழந்தைத் தொழிலாளர்களாக சட்டவிரோதமாகப் பணியாற்றகின்றார்கள். பெரம்பாலானவர்கள் உணவகங்களில் தொழில்புரிகின்றார்கள். இவர்கள் ஐந்து அல்லது ஆறு வயதிலேயே வறுமை காரணமாக வீடுகளிலும் தொழிற்சாலைகளிலும் வேலைக்கு அனுப்பப்படுகிறார்கள் என யுனெஸ்கோ அறிக்கையொன்று குறிப்பிடுகின்றது.

கனடாவில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் ரொறன்ரோவில் நவம்பர் 13ல் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கும் பாடசாலைச் சபை களுக்குமான தேர்தல்கள் ஒருவாறு முடிந்துவிட்டது. இத்தேர்தல்களில் பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் போட்டியிட்ட போதும் இரு தமிழ் வேட்பாளர்கள் மட்டுமே வெற்றிபெற்றனர். இத்தேர்தலை ஒருமுறை திருப்பிப் பார்ப்பது புலம்பெயர் வாழ்வில் எமது ஜனநாயக் பண்பை மீளாய்வு செய்துகொள்ள உதவியாக அமையும்.

# யாழ் முதல் ரொறன்ரோவரை எலெக்ஷன் கேட்ட ஐயாக்கள்

மொத்தம் 14 தமிழ் வேட்பாளர்கள். தமிழ்க் காங்கிரஸ் அறிமுகப்படுத்தியது 10 வேட்பாளர்களை - மிகுதி 4 வேட்பாளர்கள் தமிழர்களற்ற தமிழர்கள். தமிழர்களுக்கான வரை விலக்கனத்ததை தயவுசெய்து தமிழ்க் காங்கிரஸ் தனது யாப்பில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

தமிழ் என்றவுடன் 1976 தேர்தல் தான் ஞாபகம் வந்தது. "ஆண்ட தமிழ் இனம் மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பது தவறா?" சிலிர்த்துப்போன தமிழ் இனம், மனிதத்தை மறந்து "சிங்களவனின் தோலில் செருப்பு தைக்கவும்", "இரத்த திலகம் இட்டும்" பிரச்சாரத்தை கொண்டாடினினோம். தேர்தலில் தவிகூ க்கு எதிராக கேட்ட வேட்பாளர்களை துரோகிகள் என்றோம். யு.என்.பி, எஸ். எல்.எப்.பி இல் கேட்ட சிலர் தேர்தலின் பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டனர். பின்னர் இதே கதை இயக்கங்களிலும் தொடர்ந்தது. ஓரேயொரு இயக்கம், ஒரேயொரு தலைவர்.

**தேர்தல் என்பது எமது உரிமை. இதில் நாங்கள் தகுதியானவர்களையே தெரிவு செய்ய வேண்டும்.**

இப்பொழுது மீண்டும் ஒரே கூச்சல். தமிழனுக்கே வாக்களிக்க வேண்டும். நாங்கள் கனடா வந்த பொழுது கனடா ஒரு ஆங்கில, பிரென்ச் நாடு என்று தெரிந்தே வந்தோம். எங்களில் பலரை வரவேற்றது வெல்பயர் ஒப்பிசரும், வெல்கம் ஒப்பிசருமே. நாங்கள் வாழ்வது ஒரு Multi Cultural Society. எங்களது அயலில் உள்ளவர்கள் வேற்று இனத்தவர்கள். உலகம் புதிய Multi Cultural Society கொண்ட நகரங்களை உருவாக்கி விட்டது. இது தேசியம் பற்றிய பல கேள்விக் குறிகளை எழுப்புகின்றன. ஏன் எங்களது குடும்பங்களில் கூட பலர் வேற்று இனத்தவர்களை திருமணம் செய்து கொண்டு குடியும் குடித்தனமாக உள்ளார்கள். தமிழ் காங்கிரஸ் இணையத் தளத்தில் உள்ள வாசகங்கள் இவை "To encourage the sprit of multi-culturalism and tolerance, goodwill and understanding with other ethnic communities". இதுவும் தேர்தல் வாக்குறிதி போல்.

நாங்கள் தமிழ ஈழம் கேட்போம், ஆனால் கியுபெக் பிரிவினையை ஆதரிக்க மாட்டோம். எங்களது கோஷங்கள், எங்களது தேவைகளுக்கு ஏற்ப மாறும். ஒரு சில தேர்தல்களுக்கு முன்னர் சில தமிழ் வேட்பாளர்கள் ரொரன்ரோவில் ரஸ்ரியாக கேட்டனர் அப்போதெல்லாம் இவர்கள் தமிழர்கள் என்பது இவர்களுக்கு தெரியாது? சென்ற தேர்தலில் தேர்தல் வன்முறைகள் மாத்திரமல்ல, இவர்களை தோற்கடிக்க வேண்டும் என திட்டமிட்ட பிராச்சாரம் நடத்தப்பட்டது. அப்போதெல்லாம் தமிழ் மறந்து விட்டது..

கனடா ஒரு ஜனநாயக நாடு. இங்கு தேர்தலில் எத்தனை பேரும் நிற்கலாம். இந்த ஜனயாக உரிமையையே

**நாங்கள் தமிழ ஈழம் கேட்போம், ஆனால் கியுபெக் பிரிவினையை ஆதரிக்க மாட்டோம்.**

மறுக்கின்றார்கள். இதுவும் சட்ட விரோதமானதே? இது ஒரு தனிமனித உரிமை.

ரொரன்ரோ மேயர் தேர்தலில் 38 பேர் போட்டியிடுகின்றனர். நல்ல காலம் ஒரு தமிழரும் கேட்கவில்லை. கேட்டிருந்தால் தகுதியானவருக்கு எதிராக, தமிழருக்கு வாக்களிக்க கேட்டிருப்பார்கள்.

பல ஜனயாக உரிமைகள் மறுக்கப்பட்டு உள்ளன. அதுவும் பொறுப்புள்ள தாபனத்தை சேர்ந்தோரே இதற்கு வழிகாட்டுகின்றனர். உதாரணத்துக்கு மார்க்கம் மாநகரத்துக்கு 4 Regionla Councillor ஐ தெரிவு செய்யும் உரிமை அங்கு வாழும் மக்களுக்கு உண்டு. ஆனால் இப்பகுதியில் ஒரு உறுப்பினரையே தெரிவுசெய்யும் உரிமை உண்டு என பிராச்சாரம் செய்யப்பட்டது. இது கனடிய சட்ட விதிகளுக்கு முரணானது.

அடுத்து தேர்தலில் வாக்களிப்பவர்கள் கனடிய பிரசையாக இருக்க வேண்டும். ஆனால் சில அபேட்சகர்கள், தேர்தல் அட்டை கிடைக்க பெறாதவர்கள்




தங்களது விலாசத்தை உறுதிப்படுத்தும் இரு அடையாளங்களுடன் சென்றால் வாக்களிக்கலாம் எனக் கூறி பிரச்சாரம் செய்துள்ளார்கள். கள்ள வாக்களித்தால் கிடைக்கும் தண்டனையை ஒரு தடவை உறுதிபப்டுத்திக்கொள்ளவும். இவர்களெல்லாம் எமது பிள்ளைகளை வழிப்படுத்தும் ரஸ்ரியாக வலம் வரவுள்ளார்கள்.

நாங்கள் எங்களது சந்ததிக்கு கூறிச்சசெல்வதென்ன? Single Mother, Tax Fraud, Welfare என வாழ்க்கை முழுவதும் பொய் வாழ்கை வாழப்போகின்றோமா இதனை தான் எமது சந்ததி தொடர வேண்டுமா?

பல அபேட்சகர்களுக்கு தேர்தல் பிரச்சார அட்டைகள் எங்கு குத்தப்பட வேண்டும் என்பதே தெரியாது. முனிசிப்பல் குப்பை லாரி அள்ளிக் கொண்டு சென்றதை காணக்கூடியதாக இருந்தது.

ஏன் நாங்கள் இங்கு தமிழர்களை தெரிவுசெய்து அனுப்பவேண்டும். இந்த சபைகளில் தமிழ் உரிமைகளைப் பற்றி பேச முடியாது. ரொரண்ரோவில் சுமார் 150 க்கு மேற்பபட்ட இனங்கள் வாழ்கின்றன. இவர்கள் எல்லாம் ஒருவரை தெரிவுசெய்ய வேண்டும் என்றால் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிரிக்க வேண்டும். ஆனால் அவர்கள் தாங்கள் இந்த சமூகத்தில் ஒருவர் எனக்கருதி இந்த சமூக நலம் கருதி போட்டியிடுகின்றார்கள்.

கட்சி கிடையாது. இதற்கு காரணம் இந்த சூழலை நன்கு தெரிந்தவர்கள் இதனை ஆட்சி செய்யவேண்டும். எங்கள் முன்னால் உள்ள பிரச்சினைகள் என்ன? இதற்கு யார் சரியான தீர்வை முன வைக்கின்றார்கள்? என்பதே அவசியம். போட்டியிடும் பலர் சமூகத்துக்கோ, அல்லது இந்த சமூக பிரச்சனைகளுக்கோ அந்நியமானவர்கள். எந்த சமூக சேவை நிறுவனங்களிலும் சேவை செய்யாதவர்கள். இவர்களுக்கு சமூக பிரச்சினைகளைப் பற்றி என்ன தெரியும். கடந்த தேர்தலின் பின்னர் காணாமல் போனவர் இப்பொழுது வலம் வருகின்றார். இவர்கள் தேர்தல் காளான்கள். ஒருவர் தனது மனைவி வைத்தியர் என்பார். மற்றவர் அணுவாயுத கலாநிதி என்பார்.

பல வேட்பாளர்களை சந்திக்கவே முடியாது. இவர்களிடம் ஏன் போட்டி யிடுகின்றீர்கள் என்றால் ஏது ஏதோ

## தேர்தலில் தமிழ் வேட்பாளருக்கு வாக்களிப்பது வரலாற்றுக் கடமை எனின், தமிழ் உயிர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட பொழுது அதற்கு எதிராக குரல் கொடுப்பது வரலாற்று கடமையில்லையா?

கடந்த Sunday Toronto Star ல் வெளிவந்த கட்டுரையில் ஏனைய சமூகத்தினர் தகுதியானவரையே தெரிவுசெய்ய வேண்டும் எனக் கூறி கருத்து தெரிவித்த பொழுது ஒரு தமிழர் "தமிழன் தமிழனுக்கே வாக்களிக் வேண்டும்" எனக் கருத்து தெரிவித்துள்ளார். இது ஓட்டு மொத்த தமிழ் சமுதாயத்தையே பாதிக்கும். தமிழன் சேவைகள் தமிழனுக்கே என கதைக்கின்றார்கள். வைகைறையின் (கனடாவில் வெளிவரும் வாரப் பத்திரிகை.) கேள்விகளுக்கு இருவரே பதிலளித்து உள்ளார்கள். ஏனையோர் பயத்தில் ஒளிந்துவிட்டனர். Toronto Star பத்திரிகையே ஒரு தமிழ் வேட்பாளரிடமிடமிருந்து பதில் கிடைக்க வில்லை என நேரடியாகவே எழுதிவிட்டது. Toronto Starக்கே இந்த கதி எனில் எமக்கு?

தேர்தலில் தமிழ் வேட்பாளருக்கு வாக்களிப்பது வரலாற்றுக் கடமை எனின், தமிழ் உயிர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட பொழுது அதற்கு எதிராக குரல் கொடுப்பது வரலாற்றுக் கடமையில்லையா? 1976 ல் தவிகூ க்காக வாக்களித்த முஸ்லீம்களுக்கு யாழ்ப்பாணத்தில் நடந்த கதி அனைவரும் அறிந்ததே.

70களில் யாழ்ப்பாணத்தில் பிரபலாமான நாடகம் ஒன்று "ஜயா லெக்சன் கேட்கின்றார்". இந்த நாடகமே இன்று அரங்கேறிக் கொண்டுள்ளது. தேர்தல் என்பது எமது உரிமை. இதில் நாங்கள் தகுதியானவர்களையே தெரிவு செய்ய வேண்டும். 14 வேட்பாளர்களில் ஓரிருவரே சமூக நலன் கொண்டவர்கள். சமூகம் தெரிந்தவர்கள். ஏனையோர் பெயருக்கும், புகழுக்குமாக கேட்கின்றார்கள். இம்முறை நாங்கள் விடும் தவறு வரும் காலங்களில் பெரிய விருட்சமாக உருவெடுக்கும். தமிழை வைத்து சுய லாபமும் பண்மும் தேடுகின்றார்கள். எமது அடுத்த சந்ததி Mainstreamல் தங்களை ஒருவராக கருதி வாழ்பவர்கள். நாங்கள் தொலை நோக்குடன் சிந்திக்கவேண்டும். எமது ஒவ்வொரு தவறான தெரிவும் அவர்களது நலனை பாதிக்கும்.

ஏனைய சமூகம் எங்களை ஒதுக்கும். அத்துடன் தெரிவு செய்யப்படும் வேட்பாளர்களும் தமிழ் சமுாதயத்துக்கு தான் சேவை செய்வார்கள் என்ற பிம்பம் உருவாக்கப்படும். ஏனைய சமூகத்தின் வாக்குகள் எமக்கு கிடையாது. இது எமது அடுத்த சந்ததியை பாதிக்கும். தமிழர்கள் போட்டியிடும் அனைத்து தொகுதிகளிலும் இவர்கள் ஏனைய சமூகத்தின் வாக்குகள் கிடைக்கப் பெறாவிட்டால் வெற்றி பெறமுடியாது.

இது ஒரு Municipal Election. இங்கு

வினோதன் - கனடா



Sheikh Hasina

### தேர்தல் சர்ச்சையில் பங்களாதேஷ் தலைவிகள்

# தலைநகரம் ஸ்தம்பிதம்



Khaleda Zia

10 மில்லியன் சனத்தொகையை கொண்ட பங்களாதேஷ் தலைநகரான டாக்காவில் சர்ச்சைக்குரிய தேர்தல் ஆணைக்குழு அகற்றப்பட வேண்டும் எனக்கோரி நவம்பர் 11 முதல் இடம் பெற்ற அரசியல் எதிர்ப்பியக்கங்களால் வாகனங்கள் தாக்கப்பட்டன. பேருந்து, புகையிரத சேவைகள் யாவும் நிறுத்தப்பட்டன. துறைமுகங்களும் மூடப்பட்டு தலைநகரம் ஸ்தம்பித நிலையடைந்தது. அண்மைய வாரங்களில் அரசியல் வன்முறைகளால் 30 போர் உயிரிழந்ததுடன் 600க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். இந்த எதிர்ப்பியக்கம் முன்னாள் பிரதமர் ஷீக் கசசினா (Sheikh Hasina) தலைமையிலான 14 கட்சிகளின் கூட்டமைப்பினால் ஆரம்பிக்கப்பட்டது.

பங்களாதேஷ் தேசியக் கட்சியை சேர்ந்த பேகம் கலிடா ஷியா (Begum Khaleda Zia) தனது 5 வருடகால பிரதமர் பதவியிலிருந்து கடந்த மாதம் கீழிறங்கியதில் இருந்து இந்நாடு ஜனாதிபதியின் தலைமையில் ஒரு இடைக்கால நிர்வாகசபையினால் நிர்வகிகக்கப்படுகிறது. எதிர்வரும் தை மாதம் நடத்தப்படவுள்ள பொதுத் தேர்தலை சுதந்திரமானதாகவும், நியாய பூர்வமானதாகவும் நடத்துவதற்கு அரசியல் அமைப்பினால் வழிநடத்தம்படும் இவ்இடைக்கால நிர்வாகம் உதவும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் எம். ஏ. ஆஸிஸும் அவரது துணையாளர்களும் கலிடா ஷியாவின் பங்களாதேஷ் தேசியக் கடசிக்கு ஆதரவாக செயற்படுவதால் அத்தேர்தல் ஆணைக்குழு நீக்கப்பட வேண்டுமெனக் கோரியே இப்போராட்டம் ஏனைய கட்சிகளின் கூட்டமைப்பினால் ஆரம்பிக்கப்பட்டு உள்ளது.

## சமாதானப் பாதையில் நேபாள்

நேபாளத்தின் வரலாற்றில் மைல் கல்லாக சமாதான உடன்பாடு அந்நாட்டு அரசாங்கத்திற்கும், மாவோயிஸ்ட் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே 21 நவம்பரில் கைச்சாத்திடப்பட்டது. இவ்வொப்பந்தம் நேபாளத்தில கடந்த 10 வருட காலமாக 13,000 பேரை பலிகொண்ட யுத்த நிலையை முடிவுக்குக் கொண்டு வருகின்றது. இதனடிப்படையில் கிளர்ச்சியாளர்கள் ஐ. நா. சபையின் மேற்பார்வையின் கீழ் தமது ஆயுதங்களை ஒப்படைத்து இடைக்கால அரசாங்கத்தில் இணைந்து கொள்வார்கள்.

## தென் ராக்கின் பஸ்ராவில் இயந்திர படகு தாக்குதலில் பிரித்தானிய படையினர் பலி

ஈராக்கை ஈரானிலிருந்து பிரிக்கும் 120 மைல் நீளமான ஷட் அல் - அராப் (Shatt al-Arab waterways) ஆற்றுப் பிரதேசத்தில் பிரித்தானிய படகு ஒன்றின் மீது நடத்தப்பட்டுள்ள தாக்குதலில் ஒரு பெண் உறுப்பினர் உட்பட 4 இராணுவத்தினர் உயிரிழந்தும் மூவர் கடுமையான காயத்துக்குட்பட்டும் உள்ளனர். இச்சம்பவம் நவம்பர் நடுப்பகுதியில் இடம்பெற்றது.

ஈராக்கிய - பிரித்தானிய துருப்புக்களால் கடுமையாக ரோந்து செய்யப்படும் இந்நீர்வழி அண்மைக்காலம் வரை பிரித்தானிய துருப்புக்களின் நடமாட்டத்திற்கு பாதுகாப்பானதாக கருதப்பட்டது. இந்நிலைமை இத்தாக்குதல் சம்பவத்தின் மூலம் கேள்விக்கிடமாக்கப்பட்டுள்ளது.

அத்தோடு இதுவரைகாலமும் பிரித்தானிய துருப்புக்கள் மீதான தாக்குதலில் பயன்படுத்தப்படமலிருந்த சக்திவாயந்த வெடிகுண்டான IEDF இத்தாக்குதலில் பயன்படுத்தப்பட்டு உள்ளதாக கண்டறியப்பட்டு உள்ளது. ஷட் அல்-அராப் பிரதேசததில் வாழும் ஷியா முஸ்லிம்கள் அராபியராக இருந்த போதிலும் ஈரானிய ஆதரவாளர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மத்திய,தென் ஈராக் பகுதிகளைவிட அமைதியானதாகக் காணப்பட்ட இத்தென்ஈராக் பகுதியில் 7000 பிரித்தானிய துருப்புக்கள் நிலைகொண்டுள்ளனர். 2003 முதல் இன்றுவரை 125 பிரித்தானிப் படையினரும் 3000 ஏனைய கூட்டிணைந்த நாட்டுப் படையினரும் இங்கு கொல்லப்பட்டுள்ளனர். ஈராக்கின் முன்னைய ஆடசியாளருக்காதரவான சில சக்திகளும், மேற்கத்தையருக்கு எதிராக ஜிகாத்துக்கு ஆதரவளிக்கும் சக்திகளும் இன்று ஈராக்கில் அமெரிக்க தலைமையிலான அந்நிய துருப்புக்களை வெளியேற்றும் முயற்சியில் முன்னணி வகிக்கின்றன.

## “பாலஸ்தீன புதிய அரசு இஸ்ரேலை அங்கீகரிக்க மாட்டாது” கமாஸ் அறிவிப்பு

இஸ்ரேலினாலும் அமெரிக்காவாலும் கோரப்படுவதுபோல திட்டமிடப்பட்டுள்ள புதிய பாலஸ்தீன கூட்டரசு இஸ்ரேலை அங்கீகர்க்கவோ அல்லது மத்தியகிழக்கு பிரச்சனைக்கு இரு அரசுகள் (two – states) என்ற தீர்வையோ ஏறகாது என ஆட்சியிலிருக்கும் இஸ்லாமியக் குழு ஹமாஸ் தெரிவித்துள்ளது.

மேற்குலகால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய, ஹமாஸ் - அல் பற்றா ஒன்றிணைந்த அமைச்சரவை ஒன்றை உருவாக்குவதன் மூலம் கடந்த 8 மாதகாலமாக இடம் பெற்றுவரும் மேற்கின் பொருளாதாரப் பகிஸ்கரிப்பை தவிர்ப்பதற்கு பாலஸ்தீனத் தரப்பில் எடுக்கப்பட்ட முயற்சிகளை இது பாதித்துள்ளது.

ஹமாஸை ஒரு பயங்கரவாத அமைப்பாக கருதிய அமெரிக்காவும் ஐரோப்பிய கூட்டமைப்பும் அதன் தலைமையிலான நிர்வாகத்துக்கு நேரடி உதவியை நிறுத்தின. இதனால் ஏப்ரல் மாதம் முதல் பாலஸ்தீன அரசாங்கம் தனது 165,000 ஊழியர்களுக்கு ஊதியம் வழங்க முடியாத நிலையிலுள்ளது. ஹமாஸ், பற்றா சக்திகளிடையே காசாவில் இடம்பெற்ற சண்டைகள் உள்நாட்டுயுத்தம் பற்றிய ஐயத்துக்கு எண்ணெய் வார்த்தன.

## ஆப்கான் போரில் இறப்போர்தொகை நான்கு மடங்கு அதிகரிப்பு



அப்கானில் உள்ள பிரித்தானிய துருப்புக்களுடன் பிரதமர் பியேளர்.

ஆப்கானிஸ்தானில் உள்ள யுத்த நிலை காரணமாக கொல்லப்பட்டோர் தொகை இவ்வருடம் நான்கு மடங்கு அதிகரித்துள்ளதாக தெரியவருகின்றது. மேலும் விபரமான அறிக்கையொன்றில் இவ்வருடத்தில் 37000 பேர் கொல்லப்பட்டதாகவும் அதில் கிட்டத்தட்ட 1000 பேர் பொதுமக்கள் எனவும் குறிப்பிடப்பட்டு உள்ளது. ஆப்கானுக்கு விஜயம் மேற்கொண்ட ஐ. நா.வின் தூதுக்குழு அங்கு தலிபானின் வீழ்ச்சியின் ஐந்து வருட காலத்தின்பின் ஆப்கான் தலைவர்கள் மிகப்பாரிய சவால்களை எதிர்நோக்குவதாக தெரிவித்துள்ளது.

அதேவேளையில் நவம்பர் 20 இல் ஆப்கானுக்கு விஜயம் செய்த பிரித்தானிய பிரதமர் ரோனி பிளயர் தென் ஆப்கானிஸ்தானின் கெல்மன்ட் மாநிலத்தில் பஸ்ரன் முகாமிலுள்ள 800 பிரித்தானிய துருப்பினரை சந்தித்தார்.

ஐந்து வருடங்களின் முன் தலிபானுக்கு எதிரான அமெரிக்க தலைமையிலான நேட்டோ அணியின் ஆப்கான் மீதான ஆக்கிரமிப்பு முதல் அங்கு 6000 பித்தானிய துருப்பினர் நிலைகொண்டுள்ளனர். அவர்கள் தமக்காக மட்டுன்றி எதிர்கால உலக பாதுகாப்புக்காகவும் அங்கு போரிடுவதாக பிரித்தானிய பிரதமர் தெரிவித்தார்.

## பக்தாத்தில் குண்டு வெடிப்புகள் இரு நூறுக்கும் மேற்பட்டவர்கள் பலி

கடந்த நவம்பர் 23இல் பக்தாத்தில் ஷியா முஸ்லிம்களின் பிரதேசமான சட்ற நகரில் (Sadr City) இடம்பெற்ற 6 கார்க் குண்டு வெடிப்புகளில் குறைந்தது 215 பேர் கொல்லப்பட்டும் 237 பேர் காயமுற்றுமுள்ளனர். ஈராக்கின் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பின் பின் நடைபெறும் மிகமோசமான தாக்குதல் இதுவாகும். அத்துடன் இதுவரைகாலமும் சட்ற நகரம் ஆல்கய்டாவினதும், சுன்னி முஸ்லிம்களினதும் தாக்குதல்களால் பாதிக்கப்படாதிருந்தது. தற்போது இடம்பெற்றுள்ள பொதுமக்கள் மீதான இத்தொடர் தாக்குதல் ஒரு யுத்தப் பிரகடன நடவடிக்கையாக வெளிப்படுகின்றது. அதனையடுத்து உள்நாட்டு சக்திகளிடையேயான யுத்த நிலையை தவிரக்கும் வகையில் காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆதேவேளை ஷியா பகுதியினரால் நடாத்தப்படும் சுகாதார மருத்துவ அமைச்சகமும் ஆயுதம் தாங்கியோரால் சுற்றிவளைக்கப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்டது. இதற்குப் பதிலடியாக சம்பவம் நடந்த இடத்திற்கு அருகாமையிலுள்ள சுன்னி முஸ்லிம்களது பிரதேசத்தின் மீது மோட்டார் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. எல்லா சமூகங்களையும் சேர்ந்த தலைவர்களும் இணைந்து விடுத்துள்ள கூட்டறிக்கையில் சகலரும் பொறுப்புணர்வுடன் நடந்து கொண்டு, ஒன்று சேர்ந்து நிலைமையை அமைதிக்குக் கொண்டு வர முயற்சிக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### ஆபிரிக்காவில் வெள்ள அபாயம்

சோமாலியாவின் மத்திய மற்றும் தென் மகாங்களின் பல பாகங்களில் தொடரும் பலத்த மழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் கிராமங்களில் அடித்து வரப்பட்ட முதலைகளால் குறைந்தது 8 பேர் கொல்லப்பட்டனர். அயல் நாடுகளான கென்யாவும் எதியோப்பியாவும் கூட வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ளன. குறைந்தது 80 பேர் இப்பிரதேசத்தில் இறந்துள்ளனர்


விளம்பரத்துறையில் ஆர்வமுள்ளவர்கள் தேவை

உங்களுக்கு:

*உகந்த நேரத்தில்

*சுயதீனமான வேலை

*பகுதி நேரமாகவோ

*முழு நேரமாகவோ

தொடர்புகளுக்கு: 020 8279 0354


இந்த இதழில் இருந்து 'லண்டன் குரல்' பத்திரிகை தேசம் வெளியீடாக வெளிவரும் என்பதை வாசகர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

# We can help you if you wish to return to Sri Lanka. And assist you further once you are back home.



The International Organization for Migration manages migration in a number of ways. In the UK, IOM helps unsuccessful asylum seekers and irregular migrants return to their home countries by coordinating all their travel arrangements including paying for their flight tickets. Asylum seekers are also eligible for extra ssistance in their countries of origin. To find out if you qualify for IOM's assistance, call 0800 783 2332. *London office*: 020 7233 0001. *Liverpool office*: 0151 225 0142. *Glasgow office*: 0141 548 8116

IOM International Orgnization for Migration
0800 783 2332 - www.iomlondon.org

This programme is co-funded by the European Refugee Fund